மின்னணு செய்தி மடல்
இதழ்: 12
டிசம்பர் 2021 & ஜனவரி 2022

# புதிய தலைமுறை அறக்கட்டளை

"ஊக்கமது கைவிடேல்"

(கிராமப்புறக் கல்வி மற்றும் இளைஞர் மேம்பாட்டுக்காக பணியாற்றும் ஓர் மக்கள் இயக்கம் - இந்தியாவின் மிகப்பெரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஒன்று)

## தமிழகம் மேலும் சிறப்புகள் பெற பாரதத்தின் சிறப்பான மாநிலமாக திகழ்ந்திட.....

என்றும் சமூக பணியில்..... உங்கள் புதிய தலைமுறை அறக்கட்டளை.....

- தொழில் முனைவோராக உருவாகலாம் - ஐ.எஸ்.ஆர்.பி.எக்ஸ்போ மன்றம்
- கிராமப்புற மாணவர்களின் முன்னேற்றம் - இலவச கிராமப்புறக் கல்வி மையங்கள், "பன்னிரெண்டாம் வகுப்பிற்கு பிறகு என்ன படிக்கலாம் ?" வழிகாட்டி கருத்தரங்கம், விழுதுகள் உயர்கல்வித் திட்டம்
- கல்லூரி மாணவர்களுக்கு சுயதொழில் மற்றும் வேலை வாய்ப்பு வழிகாட்டுதல் - வேலை வாய்ப்பு வழிகாட்டு மன்றம்
- பெண்கள் முன்னேற்றம் - வள்ளியம்மை அம்மாள் தையற் பள்ளி & நூலகம்
- கிராமப்புற மருத்துவ முகாம்கள் - வள்ளியம்மை அம்மாள் கிராமப்புற மருத்துவ உதவித் திட்டம்
- சாலை பாதுகாப்பு நிகழ்ச்சிகள் - கருத்தரங்கம் & விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்
- யோகா பயிற்சி முகாம் - உடல்நலமும் மனநலமும் சிறந்து விளங்கிட யோகா பயிற்சி



"இளைஞர்களே எதிர்காலம் ! அவர்களைப் போற்றுவோம் எந்நாளும்....

முனைவர். பி. சத்தியநாராயணன்
நிறுவனர் & அறங்காவலர்
புதிய தலைமுறை அறக்கட்டளை



## "கடினமான வேலையை முதலில் செய்யுங்கள்"

இந்திய கடற்படை கமாண்டர்
எல். இராதாகிருஷ்ணன் (ஓய்வு) அவர்கள்
மாணவர்களுக்கு சுதந்திர தின விழாவில்
அறிவுரை வழங்கினார்



74வது சுதந்திர தின விழா கொண்டாட்டம் - 15.8.2021
புதிய தலைமுறை அறக்கட்டளை அலுவலகம், தி.நகர், சென்னை

## பொருளடக்கம்


- பகுதிநேர சிறுதொழில் வாய்ப்புகள்
- கனமழை
- காந்தியடிகள் பிறந்தநாள் விழா
- விழுதுகள் திட்டம்
- கிராமங்களில் வீடு தேடி மருத்துவ சேவை
- வங்கித்துறையில் வேலை வாய்ப்புகள்
- பன்னிரெண்டாம் வகுப்பிற்கு பிறகு என்ன படிக்கலாம்
- செயலாளர் பக்கம்

புதிய தலைமுறை அறக்கட்டளை
(கிராமப்புறக் கல்வி மற்றும் இளைஞர் மேம்பாட்டுக்காக பணியாற்றும் ஓர் மக்கள் இயக்கம் -
இந்தியாவின் மிகப்பெரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஒன்று)

## “சந்தைப்படுத்துதலே (Marketing) எல்லா தொழில்களையும் வெற்றியடைய செய்யும்”
## வீட்டிலிருந்தபடியே, இப்போழுது செய்து கொண்டிருக்கும் வேலையை செய்து கொண்டே, பகுதிநேர சிறுதொழில் வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன



முனைவர். வி.எம். பொன்னையா, Dean, School of Management, SRM IST, Potheri மற்றும் புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் து.வே.வெங்கடகிரி ஆகியோர் குத்துவிளக்கேற்றி கருத்தரங்கத்தினை துவக்கி வைத்த காட்சி

### ஐ.எஸ்.ஆர்.பி. எக்ஸ்போ மன்றம் வழங்கும்
### இளைஞர்களுக்கான முதல் தேசிய சுயதொழில் கருத்தரங்கம்
**அக்டோபர் 21 & 22, 2021, எஸ்.ஆர்.எம். தொழில்நுட்பக்கல்லூரி, பொத்தேரி, செங்கல்பட்டு**

21.10.2021 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் ஊரப்பாக்கத்தில் செயல்படும் (Annavarshini Foods LLP) நிறுவனத்தின் பங்குதாரர் **எம். நாகராஜன்** அவர்கள் தமது உரையில் **காளான் வளர்ப்பு** முறைகள், வகைகள், வளர்ப்பதற்கான மூலப்பொருட்கள், பண்ணை அமைப்பு, பால் காளான்கள் உள்பட பல வகை காளான்கள் வளர்ப்பு FSSAI அமைப்பில் பதிவு, சந்தைப்படுத்துதல் மேலும் மதிப்புக் கூட்டுப் பொருட்கள் ஆகியவைகள் குறித்து விளக்கினார்.

22.10.2021 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் சென்னையில் இயங்கும் AMMIRDHAM TRADITIONAL FOODS நிறுவனத்தின் உரிமையாளர் **திருமதி. ஆர். ராஜலட்சுமி** அவர்கள் தமது உரையில் தரமான சிறுதானியங்களை கொள்முதல் செய்யும்முறைகள், கிடைக்கும் இடங்கள், மதிப்புக்கூட்டுப் பொருட்களின் செய்முறைகள் மற்றும் சந்தைப்படுத்துல் குறித்து விளக்கினார்.

பயிற்சியாளர்கள்



எம். நாகரராஜன்



எஸ்.லோகநாதன்

**கே.எம். பாலாஜி**, துணை இயக்குனர் (எம்.எஸ்.எம்.இ வளர்ச்சி நிறுவனம்), சென்னை அவர்கள் தனது சிறப்புரையில் மத்திய அரசின் தொழில் திட்டங்கள், ஆதரவு நிதி உதவிகள் ஆகியவைகளை குறிப்பிட்டு சிறு தொழில்களை தொடங்குவதில் மாநில அரசுகளின் பங்கு குறித்தும் விளக்கினார்.



திருமதி. ஆர்.ராஜலட்சுமி

கருத்தரங்கில் கலந்து கொண்ட அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த **அருண்** பேசுகையில் “சிறுதானிய மதிப்புக்கூட்டுப் பொருட்கள் செய்யும் தொழிலை தொடங்க வேண்டும் என்பது எனது நெடு நாள் விருப்பம். ஆனால் எனக்கு அரசு கடன் திட்டங்கள் மூலம் கடன் வாங்கி தொடங்குவதற்கு சரியான வழிமுறைகள் குறித்து வழிகாட்டுதல் தேவைப்படுகிறது, புதிய தலைமுறை அறக்கட்டளையின் மூலம் கடன் திட்டங்கள் மானியத்திட்டங்கள் குறித்து மாவட்டம் தோறும் கருத்தரங்கங்கள் நடத்தினால் என்னைப் போன்ற நிறைய இளைஞர்கள் பயனடைவார்கள்”, என்று கூறினார்.



கருத்தரங்கில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினர்

எஸ்.எம். நந்தகோபால், ஆலோசகர் – விளையாட்டுத்துறை, எஸ்.ஆர்.எம். தொழில்நுட்பக்கல்லூரி, பொத்தேரி, ஆர்.சித்தேஸ்வரன், Corporate Trainer, Silverline Management Services and Solutions, Chennai, கே.சி.எம். திருமாலன் சரவணன், Co-Founder & CEO, Think to Win Academy, Chennai, புதிய தலைமுறை அறக்கட்டளையின் மயிலாடுதுறை மாவட்ட கௌரவ அமைப்பாளர் எஸ்.லோகநாதன், சென்னை காந்தி கல்வி நிலையத்தில் இருந்து கே. மோகன், தலைவர் மற்றும் முனைவர். பிரேமா அண்ணாமலை, ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

புதிய தலைமுறை அறக்கட்டளை
(கிராமப்புறக் கல்வி மற்றும் இளைஞர் மேம்பாட்டுக்காக பணியாற்றும் ஓர் மக்கள் இயக்கம் -
இந்தியாவின் மிகப்பெரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் ஒன்று)

## "கனமழை"



சந்தாஸ்ரமம், சத்தியநாராயணா கோயில் அருகில், தி.நகர்



கே.கே.நகர் - நெசப்பாக்கம் சாலை சந்திப்பு

நவம்பர் 9 & 10, 2021 ஆகிய இரண்டு நாட்கள் சென்னை (மேற்கு மாம்பலம் ஜெய்சங்கர் தெரு, பிருந்தாவன் தெரு, அயோத்திய மண்டபம், கந்தாஸ்ரமம் – சத்தியநாராயணா கோவில் அருகில், ஜூப்லி ரோடு, லேக் வியு ரோடு, அசோக் நகர் 1வது அவென்யூ, கே.கே.நகர் ராஜமன்னார் சாலை சந்திப்பு, டபுள் டேங்க் சாலை) போன்ற பகுதிகளில் புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பில் 200 நபர்களுக்கு உணவுப்பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

### மழைக்காலங்களில் நாம் கடைபிடிக்க வேண்டியவை

- பிளாஸ்டிக் பைகளை பயன்படுத்தி அதை குப்பையாக மழை நீர் கால்வாய் அடைக்கும்படி குப்பையோடு போடுதல் கூடாது.
- சுற்றுப்புறத்தை எப்பொழுதும் சுகாதாரமாக வைத்திருக்க வேண்டும்.
- நாம் அனைவரும் நமது இல்லங்களில் மழைநீர் வடிகால் திட்டத்தை முறையாக செயல்படுத்த வேண்டும்.
- சாலைகளில் பள்ளமோ குழியோ இருந்தால் அதற்குரிய அரசாங்கத் துறைக்கு தகவல் தெரிவித்து அதை சரிப்படுத்த அந்த அந்த பகுதிகளில் மக்கள் ஒரு நண்பர் குழுவாக செயல்பட வேண்டும்.

## "எளிமையும், மனஉறுதியும் மகாத்மா காந்தியின் பலம்"



தேசத்தந்தை **மகாத்மா காந்தியடிகளின் 152வது** பிறந்த தினம் காந்தி ஜெயந்தி அக்டோபர் 2ஆம் நாள் அன்று புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பில் சென்னை வளசரவாக்கத்தில் உள்ள வள்ளியம்மை அம்மாள் கல்வி மையத்திலும் விழுதுகள் திட்ட மாணவர்கள் சார்பில் எஸ்.ஆர். எம். தொழில்நுட்பக்கல்லூரி, பொத்தேரியில் உள்ள சன்னாசி மாணவர் விடுதி வளாகத்திலும், மற்றும் அறக்கட்டளையின் 18 கிராமப்புறக் கல்வி மையங்களிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

சன்னாசி மாணவர் விடுதி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முனைவர். திருமுருகன் அவர்கள் (Associate Director-Campus life), T. ராஜசேகரன் (GM-SRM - Transport) ஆகியோர் கலந்து கொண்டனர். காந்தியடிகளின் சிந்தனைகளையும், வாழ்வில் கடைபிடித்த நேர்மை, ஒழுக்கம் அதை எவ்வாறு மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பது குறித்தும் பல்வேறு தகவல்களை எடுத்துரைத்தனர். 65 மாணவர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



முனைவர். திருமுருகன் (Associate Director-Campus life), அவர்கள் மாணவனுக்கு காந்தி வாழ்க்கை குறித்த புத்தகத்தை அளித்த காட்சி

**சென்னை, வளசரவாக்கம்** கல்வி மையத்தில் காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அறக்கட்டளையின் செயலாளர் து.வே. வெங்கடகிரி மற்றும் கே.சி.எம். திருமாலன் சரவணன், Co-Founder & CEO, Think to win Academy, Chennai ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு காந்தியடிகளின் வாழ்க்கை நமக்கு கற்றுத் தரும் பாடங்கள், அவரின் வாழ்க்கை வரலாறு, நாட்டு சுதந்திரத்திற்காக அவர் ஆற்றிய பணிகள் மற்றும் காந்தியின் பொன்மொழிகள் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தனர். இந்த நிகழ்ச்சியில்15 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



வளசரவாக்கம் கல்வி மையம், சென்னை

# "கிராமப்புற மற்றும் அரசு பள்ளி மாணவர்களின் உயர் கல்வியில் ஊக்கம் தேவைப்படுகிறது"

## விழுதுகள் திட்டத்தின் மூலம் மாணவர்களுக்கு இலவச உயர்கல்வி வாய்ப்புகள்



**Dr. K.S. Lakshmi**
*Director - Admission*
*SRM IST, Kattankulathur*



**Dr. M. Leenus Jesu Martin**
*Director (Campus Life)*
*SRM IST, Kattankulathur*



**Dr. T. Mythili**
*Director, Students Affair*
*SRM IST, Kattankulathur*



**புதிய தலைமுறை அறக்கட்டளையின் சார்பில் கே.விஜயகோபால், தலைமை திட்டங்கள் & நிர்வாகம் மற்றும் ஈ.மணிராஜ். விழுதுகள் திட்டத்தின் மேலாளர் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு கல்வி சேர்க்கைக்கான அனுமதி கடிதம் அளித்த காட்சி**



**சக்திவேல் - BPT, 1st Year**
**ஆர்.கே. பேட்டை, திருவள்ளூர்**



**என்.சாருமதி - MLT, 1st Year**
**வண்டிப்பாளையம், கடலூர்**

புதிய தலைமுறை அறக்கட்டளை, **விழுதுகள்** என்ற திட்டத்தை 11 ஆண்டுகளாக நடத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு இலவச உயர்கல்வி வழங்கப்பட்டு வருகிறது.

பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள /Single Parent/ நல்ல மதிப்பெண்கள் அடிப்படையில் / தலைமை ஆசிரியை பரிந்துரை பேரில் / மாவட்ட கௌரவ அமைப்பாளர்கள் பரிந்துரையின் பேரிலும் வாய்ப்புகள் அளிக்கப்படுகின்றன. புதிய தலைமுறை அறக்கட்டளை நடத்தும் இந்த திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் மாணவர்களை கண்டறிந்து அவர்களுக்கு இந்த திட்டத்தின் கீழ் உயர்கல்வி பயில ஏற்பாடு செய்யப்படுகிறது.

இந்த கல்வியாண்டில் (2021 – 2022) 55 பேருக்கு எஸ். ஆர்.எம் பல்கலைக்கழகத்தில் (B.Com, B.O.T., BPT, Diploma Nursing, B.Tech (Civil, Mechanical, Mechatronics, EEE), BCA, B.A. English, B.C.A., B.Sc., Physician Assistant, B.SC. Hotel Management, B.Sc., Biotech, போன்ற துறைகளில் படிப்பதற்கு சீட் வழங்கப்பட்டுள்ளது என்பது கூடுதல் மகிழ்ச்சியான செய்தியாகும்.

விழுதுகள் திட்டத்தின் மூலம் பயிலும் மாணவர்களை ஊக்கப்படுத்தும் விதமாகவும் அவர்களின் தனித்திறமைகளை வெளிப்படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் **"Illuminate"** என்ற தலைப்பில் இரண்டு நாள் கலை நிகழ்ச்சிகள் (விளையாட்டுப் போட்டிகள், ஆடல், பாடல் மற்றும் குறு நாடகம்) நடத்தி வெற்றி பெறுபவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்படுகின்றன. மாணவர்கள் தங்களை ஒருங்கிணைத்து ஒரு குழுவாக செயல்படவும், தங்கள் தனித்திறமைகளை வெளிப்படுத்த ஒரு நல்ல வாய்ப்பாகவும் இந்நிகழ்ச்சி பயன்படுகிறது.




அறக்கட்டளை நடத்தும் சமூக பணிகளில் ஈடுபடும் விதமாக விழுதுகள் மாணவர்கள் ஒரு குழுவாக இணைந்து பொத்தெரி பகுதிகளில் உள்ள அரசுப்பள்ளி மாணவர்களை ஊக்கப்படுத்தி விளையாட்டுப்போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடத்தி பரிசுகள் கொடுத்து அவர்களுக்கு மகிழ்ச்சியும் ஊக்கமும் அளிக்கிறார்கள்.

# கிராமங்களில் வீடு தேடி வரும் மருத்துவ சேவை நடமாடும் மருத்துவ ஊர்தி (மொபைல் கிளினிக்)



Dr. கைலாஷ் கட்கர்
*Chief Executive Officer*
*Quick Heal Technologies*



Mrs. அனுபமா கட்கர்
Chair Person
Quick Heal Foundation

புதிய தலைமுறை அறக்கட்டளை SRM மருத்துவமனையுடன் இணைந்து கிராமப்புற மக்களின் ஆரோக்கியத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்து கிராமங்கள் தோறும் மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு பயனுள்ள ஆலோசனைகளை கிராம மக்களுக்கு வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக தங்கள் சொந்த இடத்திலேயே வைத்தியம் செய்து கொள்ளும் நடமாடும் இலவச மருத்துவ ஊர்தி ஒன்று இத்திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

23.9.2021 அன்று SRM மருத்துவமனை, பொத்தேரி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மும்பையை தலைமையிடமாக கொண்ட Quick Heal Foundation நிறுவனம் நடமாடும் மருத்துவ ஊர்தியை (Mobile Clinic) புதிய தலைமுறை அறக்கட்டளை மூலமாக SRM மருத்துவமனைக்கு வழங்கியது.

இந்நிகழ்ச்சியில் SRM மருத்துவமனை பல்கலைக்கழகத்தில் இருந்து இணைவேந்தர். டாக்டர் A. இரவிக்குமார் அவர்கள் தலைமையில் Dr.A. சுந்தரம்– Dean (Medical), Dr.K.தங்கராஜ் (Medical Superintendent), Dr.லோகராஜ் – (Dean Students Affairs), S.M. நந்தகோபால் – Advisor (Sports), Dr.T.ராஜசேகரன் – G.M (SRM- Transports) ஆகியோரும் Quick Heal Foundation இல் இருந்து திரு. கைலாஷ் கட்கர் & திருமதி. அனுபமா கட்கர் மற்றும் புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயலாளர் D.V வெங்கடகிரி அவர்களும் கலந்து கொண்டனர்.

> **"கிராமங்கள் தோறும் தங்கள் சொந்த இடத்திற்கே வீடு தேடி வரும் மருத்துவ சேவை என்பது மக்களுக்கு மிகவும் பயனுள்ள திட்டம்."**

ஒரு மாதத்திற்கு 25 கிராமங்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு செயல்படுத்தப்படும் இந்த ஊர்தியில் ஒரு தலைமை மருத்துவர், ஒரு உதவி மருத்துவர், ஒரு உதவியாளர், ஒரு மருந்து வழங்குபவர் ஓட்டுனர் ஆகியோர் கொண்ட குழு நோயாளிகளுக்கு சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், பொது மருத்துவம், போன்ற நோய்களுக்கு சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 6.10.2021 முதல் காஞ்சிபுரம் மாவட்டம் ஆப்பூர், கலிவந்தப்பட்டு, காயரேம்பேடு போன்ற பல்வேறு கிராமங்களுக்கு சென்று வருகிறது.




கலிவந்தப்பட்டு கிராமம், செங்கல்பட்டு மாவட்டம் - 10.10.2021

# கொட்டிக் கிடக்கும் வங்கித்துறை வேலை வாய்ப்புகள்



சங்கர் கணேஷ்



பொ. கணேசன்

புதிய தலைமுறை அறக்கட்டளை, கோவில்பட்டியில் உள்ள S.S.துரைசாமி நாடார் மாரியம்மாள் கல்லூரி, மற்றும் ஜீனியஸ் அகாடமி இணைந்து வங்கித்துறையில் பணி வாய்ப்புகள் என்ற தலைப்பில் இரண்டு நாள் கருத்தரங்கத்தினை நவம்பர் 13 & 14, 2021 துரைசாமி நாடார் மாரியம்மாள் கல்லூரியில் நடத்தியது. பயிற்சியாளர் **சங்கர் கணேஷ்**, தலைவர், ஜீனியஸ் அகாடமி பேசுகையில் இந்தியாவின் ஐபிபிஎஸ் அத்துடன் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவோடு ஆர்பிஐ எனப்படும் இந்திய தேசிய வங்கி பணியிடங்கள் அத்துடன் ஆர்ஆர்பி போன்ற ரீஜினல் ரூரல் பேங்க், கோ ஆப்ரேட்டிவ் வங்கி என அழைக்கப்படும் கூட்டுறவு வங்கிப் பணிக்களுக்கான வாய்ப்புகள், வங்கித்துறையில் உள்ள பதவிகள், தேர்வுகள், தகுதிகள், பாடத்திட்டங்கள், ஆளுமை திறன் போன்றவை குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். நாடார் உறவின் முறை சங்கத்தலைவர் பழனிச்செல்வம், கல்லூரியில் இருந்து செயலாளர் கண்ணன், முதல்வர் கந்தசாமி ஆகியோர், வனமூர்த்தி, பாரத ஸ்டேட் வங்கி (ஓய்வு), கோவில்பட்டி இன்னர் வீல் கிளப் தலைவர் ஜெயஸ்ரீ ஆகியோர் கலந்து கொண்டனர். திருநெல்வேலி, தூத்துக்குடி, திருச்செந்தூர் ஆகிய ஊர்களில் இருந்து 180க்கும் மேற்பட்ட இளைஞர்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர். பொ. கணேசன், துணைப் பொது மேலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை, தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் இந்த கருத்தரங்கத்தினை ஒருங்கிணைத்து நடத்தினார்.

# "பன்னிரெண்டாம் வகுப்பிற்கு பிறகு என்ன படிக்கலாம்"
## புதிய தலைமுறை அறக்கட்டளையின் புதிய முயற்சி

**நாள்: 12.10.2021 | அரசு மேல்நிலைப்பள்ளி, ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்**

**நாள்: 18.10.2021 | அரசு மேல்நிலைப்பள்ளி, மறைமலை நகர், செங்கல்பட்டு மாவட்டம்**

**மேலும் விவரங்களுக்கு 8754417308 என்ற எண்ணில் அழைக்கவும்**
**அல்லது** contact@ptfindia.org **க்கு இமெயில் அனுப்பவும்**

### பயிற்சியாளர்கள்



J.C.N. எழிலரசன்



ஏ.ஆர். பாலகிருஷ்ணன்

## CSR - சமூக மாற்றத்திற்கான ஒரு கருவி



து.வே. வெங்கடகிரி
செயலாளர்

இந்தியாவில் அனைத்து தரப்பு மக்களுக்கும் அடிப்படை வசதிகளும், பாதுகாப்பும் முன்னேற்றத்திற்கான வாய்ப்புகள் அமைவதும் ஒரு பெரிய சவாலாக உள்ளது. சுதந்திரம் அடைந்த போது 40 கோடி மக்கள் தொகையாக இருந்த நம் நாட்டின் ஜனத்தொகை, இப்போது 137 கோடியாக உள்ளது.
அதே சமயத்தில், சுதந்திரம் அடைந்து 74 ஆண்டுகளில்– i) கல்வி II) மருத்துவம் iii) விவசாயம் iv) தொழில் v) உற்பத்தித் திறன் vi) தொழில் நுட்பம் vii) போக்குவரத்து viii) நிர்வாகத்திறன் மற்றும் ix) சட்டம் ஒழுங்கு ஆகிய உத்திகளின் மூலம் நம் நாடு நல்ல முன்னேற்றம் அடைந்து உள்ளது.

1991 ஆண்டில், நமது நாட்டின் பொருளாதார கொள்கை தனியார்மயம் மற்றும் தாராளமயம் ஆகிய பிறகு, நாட்டு வளர்ச்சியில் தனியார் துறையின் பங்கு, பெரிய அளவிலே உள்ளது. இதிலே பல சாதகமான அம்சங்கள் உள்ளன.

சமூகத்துறை வளர்ச்சி (Social Sector Development)க்கு நமது நாட்டின் தனியார்துறை நல்ல பங்காற்றி வருகிறது. குறிப்பாக, 2014ல் இந்திய பாராளுமன்றத்தில் CSR (Corporate Social Responsibility) திட்டம் சட்டமாக்கப்பட்டது, ஒரு முக்கியமான நிகழ்வாகும். இதன்மூலம், கணிசமான அளவு நிதியும், அதைவிட முக்கியமாக தனியார் துறையின் "தீர்வு மற்றும் நேரம் தவறாத அணுகு முறையும்", (Result & Time Oriented Approach) இந்தியாவின் பல மாநிலங்களில் சமூக வளர்ச்சி திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதில் பேருதவியாக இருக்கிறது. ( பள்ளிக்கூடங்கள் கட்டுமானம், கல்வி சாதனங்கள், மருத்துவமனை கட்டுமானம், மருத்துவமனை சாதனங்கள், கழிப்பறை வசதி, தொழிற்பயிற்சி, சாலை அமைத்தல் போன்ற பல சமூக வளர்ச்சித் திட்டங்களை கடந்த 10 ஆண்டுகளாக பல தனியார் நிறுவனங்கள் தங்களுடைய CSR திட்டங்களின் மூலம் செய்திருக்கின்றன ).

### புதிய தலைமுறை அறக்கட்டளையின் செயல்திட்டங்கள்

- சிறு மற்றும் கிராமப்புற சுயதொழில் முனைவோர் மன்றம்
- கிராமப்புறக் கல்வி
- கல்லூரி மாணவர்களுக்கு சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டுதல்
- பெண்கள் தையற்பள்ளி மற்றும் நூலகம்
- கிராமப்புற மருத்துவ முகாம்கள்
- சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு

இதே காலகட்டத்தில், 2015ம் ஆண்டு, அமெரிக்காவின் நியூயார்க் மாநகரில் நடந்த ஐக்கியநாட்டு சபையில் (United Nations) மொத்த உலகம், 2030ம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய சமூக முன்னேற்றத்திற்கு, 17 முக்கிய அம்சங்கள் – Sustainable Development Goals– சமூகமேம்பாட்டு இலக்குகள் – (1. வறுமை இல்லை 2. பசி இல்லை 3. தரமானகல்வி...போன்றவை) பிரகடனப்படுத்தப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக, பல தனியார் நிறுவனங்களும், தொண்டு நிறுவனங்களும் (NGOs) தங்களுடைய செயல்பாடுகளிலே, ஐக்கிய நாட்டின் இந்த பிரகடனங்களை உள்வாங்கி செயல்பட தொடங்கி உள்ளது என்பது ஒரு சிறப்பு அம்சமாகும். தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் CSR திட்டங்கள் சமூக மாற்றத்திற்கு ஒரு மிகச் சிறந்த கருவியாக உருப்பெற்று வருகிறது.

சமூக மாற்றத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும், தன்னுடைய செயல் திட்டங்களின் மூலம் பணியாற்றி வரும் புதிய தலைமுறை அறக்கட்டளை, தன் பயணத்தில், உங்களை அழைக்கின்றது ! வாருங்கள், இணைந்து செயல்படுவோம்..

**மீண்டும் சந்திப்போம்...**


Our Sponsors

SRM TECHNOLOGIES

Green Pearl EDUCATION

SRM ENGINEERING CONSTRUCTION CORPORATION LTD.

CUB CITY UNION BANK LTD

NABARD NATIONAL BANK FOR AGRICULTURE AND RURAL DEVELOPMENT

TMB Tamilnad Mercantile Bank Ltd Be a step ahead in life



**புதிய தலைமுறை அறக்கட்டளை: எண்: 24, ஜி.என். செட்டி சாலை, தி.நகர், சென்னை - 600 017**
**அலைபேசி எண்: 8754417500/308/338| இமெயில்:** contact@ptfindia.org |
**வலைதளம்:** www.ptfindia.org, www.isrbexpo.org



**அச்சிட்டு வெளியிடுபவர் : து.வே.வெங்கடகிரி, செயலாளர், புதிய தலைமுறை அறக்கட்டளை**